இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 05 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 29 – புதன்கிழமை 14 ஆகஸ்டு 2024 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 05 : Thiruvalluvar Year - 2055 - Aadi 29 - Wednesday 14 August 2024 - Dak 10 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்

# ரூ.44,125 கோடி தொழில் முதலீட்டுக்கு ஒப்புதல்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (13.08.2024) தலைமைச் செயலகத்தில் 16–வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்ற போது எடுத்த படம்.

## 24,700 பேருக்கு வேலைவாய்ப்பு!

**சென்னை, ஆக. 14 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 16வது அமைச்சரவைக் கூட்டத்தில் தொழில் துறை சார்பில் 24,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.44,125 கோடி முதலீட்டிற்கான 15 புதிய தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.**

**மேலும் நீரேற்று, சிறு புனல் மின் திட்டங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை 2024க்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது!**

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (13.8.2024) தலைமைச் செயலகத்தில் 16வது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

**24,700 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.44,125 கோடி முதலீட்டிற்கான 15 புதிய தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல்**

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான 15 முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இந்த முதலீடுகளின் மூலம், 24,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும். ஆட்டோமொபைல்ஸ், எலக்ட்ரானிக்ஸ், உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உதிரிபாகங்கள் மற்றும் மின்கல உற்பத்தி ஆகிய துறைகளில் 15 நிறுவனங்கள் 44,125 கோடி ரூபாய் அளவிற்குத் தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளும்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிற்குப் பல புதிய முதலீடுகள் வரப்பெறுவதோடு, அதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் தமிழ்நாடு அரசு உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**நீரேற்று, சிறு புனல் மின் திட்டங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை2024 ஒப்புதல்**

எரிசக்தித் துறை சார்பாக தமிழ்நாடு நீரேற்று புனல் மின் திட்டங்கள் (PSP) - கொள்கை2024, தமிழ்நாடு சிறுபுனல் மின் திட்டங்கள் (SHP) – கொள்கை 2024, தமிழ்நாடு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை2024 ஆகிய புதிய கொள்கைகளுக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கை (Pumped Storage Projects) 2024**

நீரேற்று புனல் மின் திட்டம் என்பது மின்சாரத்தை சேமிக்கும் மின் நிலையங்களாகும். பகலில், சூரிய மின் உற்பத்தி நேரங்களில் நீரை உயரத்தில் உள்ள நீர்த்தேக்கத்திற்கு ஏற்றம் செய்து மின்சார ஆற்றலை சேமிக்கின்றன.

இரவு நேரங்களில், மின்சார தேவை அதிகமாக இருக்கும் போது, சேமித்து வைக்கப்பட்ட நீரானது டர்பைன்கள் வழியாக விடப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### எதிர்காலத் தேவைக்காக

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைச் சேமிக்கும் பெண்கள்!

### வாழ்வில் ஒளியேற்றிய முதல்வர் – பெண்கள் மகிழ்ச்சி!

சென்னை, ஆக. 14 -

தமிழ்நாடு அரசின், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை பெரும்பாலான பெண்கள், தங்களின் எதிர்கால பொருளாதார தேவைக்காக சேமித்து வருகின்றனர். இத்திட்டம் பொருளாதார ரீதியில் பெண்களுக்கு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தியுள்ளதாக 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு பாராட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் ஒரு கோடியே 15 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு திராவிட மாடல் அரசு சார்பில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இத்தொகை தங்களது குடும்பச் செலவுக்கு பயன்படுவதாகவும், குழந்தைகளின் படிப்பு தேவைகளை நிறைவேற்ற முடிவதாகவும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் பெண்கள் மனமார்ந்த நன்றி தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மகளிர் உரிமைத் தொகை பெறும் பெரும்பாலான பெண்கள், மாதந்தோறும் கிடைக்கும் ஆயிரம் ரூபாயில் குறிப்பிட்ட தொகையை தங்களது எதிர்காலத்துக்காக வங்கியில் சேமித்து வைத்து வருவது தற்போது தெரியவந்துள்ளது. இதற்காக கூட்டுறவு வங்கிகளில் சேமிப்புக் கணக்கு தொடங்கி, தங்களது எதிர்கால பொருளாதார தேவைக்காக, மகளிர் உரிமைத் தொகையை டெபாசிட் செய்து வருகின்றனர்.

மற்ற வங்கிகளை விட கூட்டுறவு வங்கிகள் கூடுதல் வட்டி தருவதால் இவ்வங்கியில் பெண்கள் சேமிப்பு கணக்கு தொடங்கி, உரிமைத் தொகையை சேமித்து வருகின்றனர்.

மற்ற சேமிப்புக் கணக்குகளுக்கு 7 சதவிகித வட்டி தரப்படும் நிலையில், மகளிர் உரிமைத் தொகைக்கான வங்கிக் கணக்கில் சேமிக்கப்படும் தொகைக்கு 8 சதவிகித வட்டி தருகின்றன கூட்டுறவு வங்கிகள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை உருவாக்கி மாதந்தோறும் வங்கிக் கணக்கில் ஆயிரம் ரூபாய் செலுத்தி தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தங்களது வாழ்வில் ஒளியேற்றியுள்ளதாக பெண்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், பொருளாதார ரீதியில் பெண்களுக்கு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தியுள்ளதாக 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு பாராட்டியுள்ளது.

## இந்தியாவிலேயே முதன்முறையாக திருபெரும்புதூரில் 18,720 படுக்கைகளுடன்

# ரூ.706.5 கோடியில் தொழிற்சாலைப் பணியாளர்கள் தங்கும் விடுதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆக.17 அன்று திறந்து வைக்கிறார்!

### அமைச்சரவைக் கூட்ட தீர்மானங்களை விளக்கி அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

**சென்னை, ஆக. 14 -**

**இந்தியாவிலேயே முதன்முறையாக திருபெரும்புதூரில் 18,720 படுக்கைகளுடன் ரூ.706.5 கோடியில் தொழிற்சாலைப் பணியாளர்கள் தங்கும் விடுதியை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகிற ஆக.17 அன்று திறந்து வைக்கிறார் என்று அமைச்சரவைக் கூட்ட தீர்மானங்களை விளக்கி செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் நேற்று (13.08.2024) தலைமைச் செயலத்தில் தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் சில முக்கியமான முடிவுகள் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறையின் சார்பில், இன்றைக்கு நடைபெற்றிருக்கக்கூடிய அமைச்சரவை கூட்டத்தில் ஏறத்தாழ 44,125 கோடி ரூபாய் முதலீட்டிற்காக 15 முதலீட்டுத் திட்டங்களுக்கு இந்த அமைச்சரவை ஒப்புதலை தந்திருக்கிறது. இத்தகைய முதலீடுகள் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கக்கூடிய இந்த முதலீட்டுத் திட்டங்களின் அடிப்படையில், ஏறத்தாழ 24,700 நபர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது வந்திருக்கக்கூடிய இந்த முதலீடுகள் குறிப்பாக வாகன உற்பத்தி, மின்னணு பொருட்கள்



மற்றும் உணவு பதப்படுத்துதல் (Food processing), அதைப்போல, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (Renewal Energy) பொருட்கள் மற்றும் பேட்டரி உற்பத்தி ஆகிய தொழில்கள் குறித்து முதலீடுகள் இன்றைய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தூத்துக்குடி மாவட்டத்தில் செம்காப் நிறுவனத்திற்கு அவர்களுடைய முதலீடாக 21,340 கோடி ரூபாய், வேலைவாய்ப்பாக 1,114 நபர்களுக்கு அந்த வேலைவாய்ப்பு உருவாக்கக்கூடிய திட்டங்கள்.

காஞ்சிபுரத்தில் மதர்சன் எலக்ட்ரானிக்ஸ் 2,200 கோடி ரூபாய் முதலீட்டில் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய திட்டம்.

ஈரோட்டில் மில்கி மிஸ்ட் அவர்களுடைய உணவுப் பதப்படுத்தல் தொழிலில் 1,777 கோடி ரூபாய் முதலீட்டில் 2,025 பேருக்கு வேலைவாய்ப்பு.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.1597 கோடியில் தொழிற்சாலை!**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் லோகன் கிரீன் டெக் 1597 கோடி ரூபாய் முதலீட்டில் 715 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்க முதலீடுகளாக அமைந்திருக்கிறது. Global Capability Centres என்று சொல்லக்கூடிய உலகளாவிய திறன்மயங்களுக்கான அவற்றின் விரிவாக்கத்திற்கான ஒப்புதலும் அளிக்கப்பட்டிருக்கிறது. UPS மற்றும் அஸ்ட்டிராஜெனிக்கா இந்த இரண்டு நிறுவனங்களும் அந்த Capability Centersயை விரிவாக்கம் செய்வதற்கான ஒப்புதலும் தரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அமைச்சரவை கூட்டத்தில் நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, ஏறத்தாழ 44,125 கோடி ரூபாய் அளவிற்கு புதிய முதலீடுகள், 15 புதிய நிறுவனங்களில் ஏறத்தாழ 24,100 நபர்களுக்கு

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

இம்பால், ஆக. 14 –

மணிப்பூரில் மீண்டும் வன்முறையால் நாட்டு வெடிகுண்டு வெடித்ததில் முன்னாள் எம்.எல்.ஏ.வின் மனைவி உயிரிழந்தார். மணிப்பூர் மாநிலத்தின் சாய்க்குல் சட்டப்பேரவை தொகுதியில் காங்கிரஸ் எம்.எல்.ஏ., வாக இருந்தவர் யம்தோங் ஹாவோகிப் (64). பின்னர் பா.ஜ.க. கட்சிக்கு தாவினார்.

இவர் காங்போக்பி மாவட்டத்தில் குகி மற்றும் ஜோமி இனத்தவர் அதிகம் வசிக்கும் எகோமுலாம் என்ற பகுதியில் வசித்து வந்தார். இவரது மனைவி சாருபாலா (59) மைத்தேயி இனத்தைச் சேர்ந்தவர்.

இவர்களது வீட்டில் கடந்த சனிக்கிழமை 3 மணியளவில் குண்டு வெடிப்பு சத்தம் கேட்டது. வீட்டில் உள்ள பழைய பொருட்களை எரித்தபோது அதில் இருந்த நாட்டு வெடிகுண்டு வெடித்ததால் சாருபாலா இறந்ததாக போலீஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தில் வேறு யாரும் காயம் அடையவில்லை. இச்சம்பவம் தற்செயலாக நடந்ததா அல்லது குடும்ப பிரச்சினை காரணமாக நடந்ததா என பல கோணத்தில் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.